# விசுவாசத்தினால் குணமாக்குதல்

1. பிலடெல்ஃபியாவைச் (Philadeiphia) சேர்ந்த ஒருவர் கீழ்கண்டவாறு சாட்சி கூறுகிறார். “என்னுடைய சின்ன பையன் கீழே விழுந்து தன் முழங்கையின் கீழ் இரண்டு எலும்புகளையும் முறித்துக் கொண்டான். என்னுடைய சகோதரன் ஒரு வைத்திய நிபுணர். அவர் என் வீட்டிற்கு வந்திருந்தார். நான் அவரை அவனுடைய கையை பொருத்தி சிகிச்சை அளிக்க சொன்னேன். அவரும் அதை செய்தார். கட்டு போட்டு (Bandage) கைக்கு சிகிச்சை அளித்தார். என்னுடைய சின்ன பையன் பொறுமையாயிருந்தான். எவ்விதமான முணுமுணுப்புமில்லாமல் அந்த நாளைக் கழித்தான்.
2. அடுத்த நாள் காலை அவன் என்னிடம் வந்து, அப்பா, இந்த கட்டை எடுத்து விடுங்கள் என்று கேட்டுக் கொண்டான். இல்லை மகனே, இதனை 5 அல்லது 6 வாரங்கள் கழற்றாமல் அப்படியே இருக்க வேண்டுமென்று கூறினேன். அதற்கு அவன், ஏன் அப்பா, இது சுகமாகிவிட்டது என்றான். அதற்கு நான் இல்லை மகனே அது முடியாத காரியம் என்றேன். அதற்கு அவன், ஏன் உங்களுக்கு ஜெபத்தில் விசுவாசம் இல்லையா அப்பா என்றான். அதற்கு நான், என் மகனே எனக்கு ஜெபத்தில் விசுவாசமிருக்கிறது என்றேன். அதற்கு அவன், அப்பா நேற்று நான் படுக்கைக்கு போகும்போது இது எனக்கு வேதனை கொடுத்தது. என்னை சுகமாக்கும்படி இயேசுவை வேண்டினேன். அவர் என்னை சுகமாக்கினார் என்றான்.
3. அவனுடைய விசுவாசம் தணிந்து போகாதபடி நான் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. எனக்குள்ளே ஒருவிதமான சந்தோஷம் உண்டானது. நான் அவனை நோக்கி பிரியமான மகனே இந்த கட்டை உன் சித்தப்பாதான் போட்டார். அது எடுக்கப்பட வேண்டுமானால் அவர்தான் செய்யவேண்டுமென்றேன். உடனே, அவன் சித்தப்பாவிடம் சென்று அதைக் கழற்றும்படி கேட்டுக் கொண்டான். அதற்கு அவர் 6 அல்லது 7 வாரங்கள் அப்படியே இருக்க வேண்டுமென்றும், அதுவரை பொறுமையாக இருக்க வேண்டுமென்றார். அதற்கு அவன், அவரிடம் இயேசு தன்னை குணமாக்கினார் என்று கூறினபோது, அவர் அதை அசட்டை செய்து புத்தியீனமான காரியம் என்றுகூறி அனுப்பிவிட்டார்.
4. அடுத்தநாள் காலையிலும், என் மகன், என்னிடம் வந்து, அவன் சந்தேகமில்லாது சுகம் அடைந்துவிட்டேன் என்று நான் ஏறத்தாழ நம்பக்கூடிய அளவுக்கு மனமார்ந்த உள்ளார்ந்த உறுதியோடு கெஞ்சினான். நான் என் சகோதரனிடம் சென்று அவனுடைய கை கட்டுகளை அவிழ்த்து அதனை அவனையே பார்க்க செய்யமுடியுமா, அப்பொழுது தான் அவன் திருப்தியடைவான் என்றேன். அதை நீ செய்யவில்லை என்றால் அவன் ஒரு கீழ்ப்படிகிற பையனாய் இருந்தாலும் கூட அவன் அதனை தானே கழற்றிவிடுவான் என்று அஞ்சுகிறேன் என்றேன். அப்பொழுது அது அவனக்கு மோசம் உண்டாக்கலாமென்று கூறினேன்.

5. என் சகோதரன் எனக்கு இணங்கி அவனுடைய கை கட்டுகளையும், பட்டைகளையும் கழற்றி பார்த்தபோது மிகவும் ஆச்சரியப்பட்டான். அது நன்றாக சுகமாகிவிட்டதைப் பார்த்து மயக்கம் அடையும் அளவிற்கு திகைப்படைந்தான். என்னுடைய சகோதரன் எளிமையான இருதயமுடையவனாக இருந்தபோதிலும், அவனுடைய மாணவ நாட்களில் அவன் தேவனை விட்டுவிலகி அலைந்து போனான். ஆனால் இந்த காரியம் அவனை மறுபடியும் கர்த்தரிடம் சேர்த்தது என்று அவர் சாட்சி கூறினார்.

6. இந்த சாட்சியின் கூற்று நம்பக்கூடிய அளவிற்கு காணப்படுகிறது. கடந்த காலத்தைப் போல் இப்பொழுதும் குணமாக்குகிற கர்த்தருடைய வல்லமையைக் குறித்தும், தேவன் அப்படிபட்ட ஒரு தயவை அருளி சில சமயங்களில் ஜெபத்துக்கு பதில் அளிக்கிறார் என்பதையும், எந்த ஒரு கிறிஸ்தவனும் சந்தேகிக்க முடியாது, என்றபோதிலும் இழந்துபோனதை திரும்பப்பெறுகிற காலம், தெம்பூட்டுகிற காலம் (அப் 3:19-21). இனி ஒரு சாபமுமிராது (வெளி 22:3) என்ற காலம், சரீர சுகம் பெறுதல் சாதாரணமாயிருக்கிற காலம் (ஏசா 35:5,6; எசே 47:1,7,8,12,19; மல் 4:2) இன்னும் வரவில்லை. மேற்கண்டவைகளையும் ஆதி திருச்சபையின் வரங்களால் ஜெபத்துக்கு கிடைத்த அப்படிப்பட்ட பதில்களையும் ஒன்றோடொன்று குழப்பிக் கொள்ளக்கூடாது. அந்தக் காலக்கட்டத்தில் சபையானது இன்னும் ஸ்தாபிக்கபடாமலிருந்தது. ஆதலால், வரங்களை ஒரு அடையாளமாக தேவன் சபையின்மேல் பொழிந்தருளினார்.

7. அதை அவர் விசுவாசிகளுக்கு அல்லாது, அவிசுவாசிகளுக்கு அடையாளமாக கொடுத்தார் (1கொரி 14:22). அவ்விதம் அவைகள் கிரிச்தவபோதகர்கள் தேவனால் ஆனவைகளென்று-பரிசுத்தவான்களுக்கு அல்லாது-அவிசுவாசிகள் மனதார ஏற்றுக் கொள்ளும்படி கொடுக்கப்பட்டவைகளாகும். புதிய ஏற்பாடு அப்பொழுது கொடுக்கப்படாமலிருந்தால் பரிசுத்தவான்களுக்கு பக்தி விருத்தி செய்யவும் அவைகள் உதவி புரிந்தன. இந்த சுகமாக்கும் வரத்தை உடையவர்கள் அதை உபயோகிக்கும்போது, ஜெபம் செய்யாது, அதற்கு பதில் சுகமளித்தலை கட்டைளையிட்டனர் என்று நாம் கவனிக்கிறோம் (அப் 3:1-11). மேலும் இந்த சுகமளிக்கும் வரத்தை தன சுயத்தை சுகமாக்கவும், சபையின் பிற அங்கத்தினரை சுகமாக்கவும் அல்லாது, புறமக்களுக்காகவே ஒரு சாட்சியாக செயல்படுத்தப்பட்டது என்பதையும் நாம் கவனிப்போமாக.

## தேவ சித்தம் தேடுவதின் முக்கியத்துவம்

8. சரீர சுகத்திற்கு சம்பந்தமாக நாம் என்ன எதிர்பார்க்க வேண்டும் என்ற தேவனுடைய சித்தத்தை அறியதேடுவதில், அவர் எவைகளை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறாரோ அவைகளை மட்டுமே அவர் செய்வார் என்று விசுவாசத்தினால் அவரில் எதிர்பார்க்கக் கூடும் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். நம்முடைய, மற்றவர்களுடைய சபலங்களும், வாஞ்சைகளும், தீர்மானங்களும் தேவனுக்கு முன்பாக விசுவாசக் கோரிக்கைகளுக்கு அஸ்திபாரமாக ஆகாது.. ரோம 4:17-21இல் இருக்கிற வண்ணம் அவருடைய வாக்குத்தத்தங்கள் மட்டுமே அப்படிபட்ட அஸ்திபாரங்களாயிருக்கின்றன.

தேவன் தங்களை குணமாக்குவார் என்று விசுவாசிக்கிற எல்லாருடைய சரீர வியாதிகளையும் குணமாக்க தம்முடைய வார்த்தையில் அவர் வாக்குத்தத்தம் பண்ணாதிருந்தாரேயானால், அவர் தங்களை குணமாக்குவார் என்று அவர்கள் விசுவாசிக்கிறதினிமித்தம் அவர்களை குணமாக்க அவர் கட்டுப்பட்டிருக்கவில்லை.

9. "நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்" (யோவா 15:7) என்ற வசனத்தின்படி நாம் நம்மை குணமாக்கும்படி ஜெபிக்கலாமே என்று அநேகர் சிந்திக்கலாம். இந்த வாசகம் இரு நிபந்தனைகளோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தின் முன்பகுதி அவைகளைத் தெரிவிக்கிறது. (1) நீங்கள் என்னிலும், (2) என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால் என்பதில் இந்த இரு நிபந்தனைகள் இருக்கிறதைக் காண்கிறோம். இந்த எல்லை வரம்புகள், இவ்விதம் யார் கேட்கலாம் என்பதை நமக்குத் தெரிவிக்கிறது.

10. முதல் நிபந்தனை : நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் அதாவது என்னில் நிலைத்திருக்கிற விசுவாசிகளாகிய நீங்கள் உங்களுடைய உங்களுடைய சித்தத்தை என்னுடைய சித்தத்தில் புதைத்து அமிழ்ந்திருப்பது மட்டுமல்லாது எவ்வளவு காலம் அவ்விதம் நிலைத்திருக்கிறீர்களோ அவ்வளவு காலமட்டுமே இந்த வாசகத்திபடி ஜெபிக்க சிலாக்கியம் பெற்றிருக்கிறீர்கள்" என்ற பொருளில் இயேசு கூறுகிறார். ஏனெனில் ஒருவன் கிறிஸ்துவில் நிலைத்திருக்காவிடில் "அவன் வெளியே எறியுண்டக் கொடியைப் போல எறியுண்டு உலர்ந்து போவான்" (யோவா 15:6) அவனுக்கு, விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படுகிற இந்த வாக்குத்தத்தத்தில் எந்த ஒரு பங்கும் கிடையாது.

11. இரண்டாவதாக : "என் வார்த்தை உங்களில் நிலைத்திருந்தால்" என்பதாயிருக்கிறது. தேவனுடைய சித்தத்தை அறிய இருதயபூர்வமான வாஞ்சை நமக்கு இருக்குமானால், இயேசு எவ்விதம் தமது சொந்த திட்டத்தை செய்யாமலும், எவ்விதம் அவர் தேவனுடைய திட்டத்தை வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருகிற" பிரகாரம் நிறைவேற்றுவதில், முனைந்திருந்தார் என்பதையும் நாம் நினைவுகூருவோம். இது நம்மை அவரைப் போலவே தேவனுடைய வசனத்திற்கு அதிகமாய் செவிசாய்க்கச் செய்கிறது. மேலும் அது அவ்விதமே அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருக்கும், விளைவை உண்டாக்குகிறது. இந்த எல்லை வரம்புகள், நிச்சயமாக இந்த வாக்குத்தத்தத்திலிருக்கிற எல்லாவித பங்கு உரிமையிலிருந்தும் ஏறெடுக்கப்படுகிற ஜெபங்களின் பெரும்பாலானவற்றை துண்டித்து விடுகிறது.

12. "என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று சொல்லுகிற விசுவாசமுள்ள பிரதிஷ்டையின் ஆவி, அப்படிப்பட்ட குணமாகுதல் தேவனுடைய வார்த்தைகளில், சுவிசேஷயுக பிரதிஷ்டைக்காரர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்படவில்லை என்று கண்டுகொள்ளுமானால், அந்த பிரதிஷ்டையின் ஆவி தங்களுக்கு சரீரம் குணம் பெறுதல் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவனுடைய சித்தம் அது என்று கோரமாட்டார்கள். அதற்கு மாறாக வேத அதிகாரபூர்வமற்ற கோரிக்கைகள் "உம்முடைய சித்தம் எதுவாயிருப்பினும், என்

சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்ற விளைவை உண்டாக்குகிறதால், அப்படிப்பட்ட கோரிக்கைகளை செய்வதிலிருந்து விசுவாச பிரதிஷ்டையின் ஆவி அவர்களை தடுத்து விடும்.

13. பிரதிஷ்டை நம்முடைய நம்முடைய எல்லா முழுமையையும் நமக்குரிய எல்லாவற்றிலும் தேவனுடைய சித்தத்திற்கு அர்ப்பணித்ததுமல்லாது அது தேவனுக்கு உண்மையாய் இருந்தலை செயல்படுத்திக் காட்டுவதில், நம்முடைய அற்ப மனுஷீகம் முழுவதையும் பயன்படுத்தி தீர்ந்து போகச் செய்கிறது. இவ்விதம் பிரதிஷ்டை நம்முடைய மனுஷீகத்தை பயன்படுத்தி தீர்ந்துபோகச் செய்வதில் நம்முடைய சரீரம் சுகமும் அவருடைய ஊழியத்தில் சேர்ந்திருக்கிறது.
14. தேவனுக்கு பிரதிஷ்டை செய்திருப்பின் நோக்கமும் விசுவாசத்தினால் குணம்பெறுதலின் நோக்கமும் ஒன்றுக்கொன்று நேரடியாக முரண்பட்டிருக்கிறத்தைக் காண்கிறோம். தேவனுக்கு தங்கள் ஜீவனையும் பெலத்தையும் மனதையும் (Mind) எல்லாவற்றையும், தேவன் ஏற்றுக்கொண்ட பிரியமான ஒரு பலியாகப் பிரதிஷ்டை பண்ணியிருக்கிறவர்கள், தங்கள் பலியாக செய்துக் கொண்டிருப்பவைகளை திரும்பத் தங்களுக்கு எடுத்துக் கொள்ளும்படி தகுந்த உரிமையுடன் கேட்க முடியாது.
15. அவருடைய மரணத்தோடு இணைக்கப்படும்படி உடன்படிக்கை பண்ணினவர்கள் (பிலி 3:10), ஜெயங்கொண்டவர்கள் என்ற முறையில் தங்களுடைய முடிவான வெகுமதி ஆண்டவருடைய ஊழியத்தில் மரணபரியந்தம் உண்மையாய் விசுவாச (பற்றுறுதியுடன் faithful) இருத்தலைச் சார்ந்திருக்கிறது, சார்ந்திருக்க வேண்டும். ஆதலால் அவர்கள் தேவனுக்கு கொடுத்துவிட்ட தங்களுடைய சரீரங்களைக் குறித்து (ரோம 12:1), தேவன் என்ன செய்ய வேண்டும் என்று தாங்கள் விரும்புகிறதை தேவனிடம் சொல்லாதிருக்க வேண்டும் என்று மேலும்
அவர்கள் உணரவேண்டும்.

### புதிய ஏற்பாடு சம்பங்களில் ஆதாரம்

16. புதிய ஏற்பாடு சம்பங்களை புதிய ஏற்பாட்டில் தேடிப்பார்போமானால், 'பிரதிஷ்டை பண்ணின ஒருவன்' தன்னுடைய சரீர வியாதியிலிருந்து அற்புதமாகக் குணமாக்கப்பட்டதைக் குறித்து எந்தவொரு சம்பவத்தையும் காண முடியாது. இயேசுவோ, அப்போஸ்தலர்களோ அல்லது ஆதிசபையில் பிரதிஷ்டை செய்திருந்தவர்களில் எந்தவொருவரோ, அற்புதமாக சரீரம் குணமடைதலைப் பெற்றவர்களாயிருக்கவில்லை. இயேசுவின் வல்லமை ஜனங்களைக் குணப்படுத்த அப்பியாசிக்கப்பட்டது என்பது உண்மையே. ஆனால் அவர், தாம் களைப்படைந்தவராயிருக்கும் போது, இயற்க்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் பெலத்தைப் பெற்றக் கொள்ள முற்படாது, கிணற்றின் அருகில் இளைப்பாறினார் (யோவா 4:6). திரளான கூட்டம் பசியாயிருந்த போது, இயற்க்கைக்கு அப்பாற்ப்பட்ட வல்லமையைக் கொண்டு அவர்களை போஷித்தார். ஆனால் அவர், தாம் பசியாக இருந்தபோது தம்முடைய பசியைத் தீர்க்க, கற்களை அப்பங்களாக மாறும்படி கட்டளைக் கொடுக்கவில்லை. ஆனால் அதற்கு பதிலாக, தம்முடைய சீஷர்களை

ஆகாரம் வாங்கி கொண்டு வரும்படி பக்கத்திலுள்ள ஊருக்கு அனுப்பி வைத்தார் (யோவா 4:8).

17. இயேசு மரணத்திலிருந்து தம்முடைய ஜீவனைக் காத்துக்கொள்ள, பன்னிரண்டு லேகியோனுக்கு மேலான தேவதூதர்களை கேட்ட உடனே பெறக்கூடியவராயிருந்த போதிலும், அவர் அவ்விதம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் கேட்கவில்லை, கேட்கவும் மாட்டார். (மத் 26:53) ஏனெனில் அவர் மரணபரியந்தம் தம்மையே பிரதிஷ்டை பண்ணியிருந்ததால், ஜீவன் மேலுள்ள தம்முடைய பிடியை வைத்துக் கொள்ளவோ, அதனை கேட்கவோ அதற்காக இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட முறைகளை பயன்படுத்தவோ அவரால் முடியாது. அவரது பிரதிஷ்டை, அவரது விரோதிகள்கூட அவர் சிலுவையில் தொங்கும் போது "மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள திராணியில்லை" என்று பரிகாசமாக விமர்சிக்குமளவுக்கு உண்மையாயிருந்தது, இயேசு தம்மை இரட்சித்து கொள்ளவில்லை என்பதற்காக நன்றி செலுத்துகிறோம். அல்லாவிடில் நமக்கு மீட்பர் கிடைத்திருக்க மாட்டார்.

18. பரி.பவுல் தன்னுடைய மாம்சத்தில் முள்ளாகக் கொடுக்கப்பட்டிருந்த சரீரப் பிரச்சனையை நீக்கிப் போட, மூன்று முறை கர்த்தரிடம் மன்றாடியபோது தேவன் அந்த சரீர பிரச்சனையை எடுத்து போட மறுத்துவிட்டார். ஆனால் "என் கிருபை உனக்கு போதும். பலவீனத்திலே (மாம்ச பெலவீனத்திலே கலா 13:14) என் பலம் பூரணமாக விளங்கும்". அதாவது தேவகிருபை அதனை ஈடுசெய்யும் என்று அவனுக்கு தேவன் கூறினார் (2கொரி 12:9). பரி.பவுலும் ஆவியின் வரங்களை குறிப்பாக குணமாக்கும் வரத்தையுடையவராயிருந்த போதிலும், (அப் 19:6) எப்பாப்பிரோதீத்து (பிலி 2:25-27) வியாதியாயிருந்து மரண படுக்கையில் இருந்த நிலையிலுங் கூட அவனுக்கு வியாதியிலிருந்து குணமளிக்க பரி.பவுல் பிரயாசப்பட்டதாக எந்தவித ஆதாரமுமில்லை.

19. தீமோத்தேயு வயிற்றுக் கோளாறால் அவதிப்படும்போது, அவனைக் குணமாக்க பவுல் ஜெபிக்கவோ, ஒரு கைக்குட்டையை அனுப்பி வைக்கவோ இல்லை. (1தீமோ 5:23) அங்கு பவுல் திராட்சை ரசத்தை கூட்டிக்கொள் என்று மருத்துவ பரிகாரத்தை செய்யும்படி பரிந்துரை செய்கிறார். பரி.பவுல் திராட்சை ரசத்தை ஒரு வெறியுண்டாக்கும் மதுவாக அல்லாது, ஒரு மருந்தாக மட்டுமே தீமோத்தேயுவுக்குப் பரிந்துரை செய்தார்.

20. நாம் இதுவரை அறிந்திருக்கிறதின்படி தேவனுடைய வல்லமை இந்த பிரதிஷ்டையிலிருக்கும் சகோதர்களின் நலன்களுக்காகக் கேட்கப்படவோ, அப்பியாசிக்கப்படவோ, செய்யப்படவோ இல்லை என்பதை புதிய ஏற்பாட்டில் காண்கிறோம். அவர்களுடைய பெலவீனங்களையும் பாடுகளையும் சுமந்து அவைகளின் மூலம் (ஆவிக்குரிய கிருபைகளை வளர்த்து) ஆசீர்வாதங்களைப் பெற்றனர். அதே சமயம் அவர்களுக்கு இருந்த அறிவைக் கொண்டு மிகவும் தகுதியான ஆகாரத்தையும் மருத்துவ பரிகாரத்தையும் பயன்படுத்தினார்கள்.

21. நாம் ஏற்கனவே பார்த்தபிரகாரம் தேவன், சில சந்தர்ப்பங்களில் ஜெபத்துக்குப் பதில் அளித்து சரீர சுகத்தை அருளலாம் என்பதை (பாரா 1-5), நாங்கள்

மறுக்கவில்லையாயினும், வேதவாக்கியங்களிலிருந்து நாம் கண்டு கொண்ட கணிப்பிலிருந்து, சரீர குணமடைதலுக்காக அவரை நாடுகிற கிறிஸ்தவர்கள் தங்களது பக்குவப்படாத நிலையை எடுத்துக் காட்டுகிறார்கள் என்று தெரிகிறது. அவர்கள் மற்றவிதத்தில் எவ்வளவாய் வளர்ச்சி அடைந்திருந்தாலும் கூட தாங்கள் முதிர்வடையாத, பக்குவமடையாத கிறிஸ்தவர்கள் என்பதை தெளிவாய் காண்பிக்கிறார்கள். அப்படிப்பட்டதைக் கேட்காது அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியையும் (லூக் 11:13) தங்கள் விசுவாசத்தையும் (லூக் 17:5) அறிவையும் (எபே 4:13), ஞானத்தையும் (யாக் 1:5), நீதியையும் மத் (6:33) போன்ற ஆவிக்குரிய கிருபையான தயவுகளுக்காகவும் அவைகளின் விருத்திக்காகவும் கர்த்தரிடம் கேட்கலாம். அவர்கள் தங்கள் சரீர சுகம் போன்ற உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தை, தேவனுக்கு எது ஞானமாக தோன்றுகிறதோ அந்த அளவுக்கு அவைகளை கொடுக்கும்படி தேவனுடைய ஞானத்திற்கே விட்டுவிடவேண்டும். அப்படிப்பட்ட விதத்தில் மட்டுமே அவர்கள் தகாதவிதமாய் கேட்கவில்லை என்று நிச்சயத்து இருக்கலாம் (யாக் 4:3).

22. சில வேதவாக்கியங்கள் மேற்கண்ட கருத்துக்கு இணக்கமற்றவைகளாக இருக்கிறார்போல சிலரால் கருதப்படுகின்றன. அவைகள் பிரதிஷ்டை பண்ணியிருக்கும் கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரம் குனமடைதலை எதிர்பார்க்கவும், மற்றவர்களை இந்த காலக்கட்டத்தில் குணமாக்கவும் போதிக்கின்றன என்று கருதுகிறார்கள். அவைகளில் சிலவற்றை இங்குக் கவனிப்போம்.

### அவர் தாமே நோய்களை சுமந்தார்

23. “அவர்தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நோய்களை சுமந்தார்” (மத் 8:17; ஏசா 53:4). சிலருடைய கேள்வி என்னவேனில் கிறிஸ்து நம்முடைய வியாதிகளை சுமந்து விட்டாரேயானால், நாம் ஏன் அவைகளை வைத்துக்கொண்டு அவைகளோடு போராட வேண்டும் என்பதே. அவர்கள் விசுவாசத்தினால் குணமாக்க (Faith Healing) அவ்விதம் தங்களை தேவன் குணமாக்கவோ, தாங்கள் பிறருக்கு குணமளிக்கவோ எதிர்பார்க்கிறார்கள். மத் 8:17; மாற் 5:30; லூக் 6:19; எபி 4:15 ஆகியவைகளை ஒப்பிட்டு பார்த்தால் அது இந்த தீர்க்கதரிசனமும் கிறிஸ்துவின் முதல் வருகையில் பரிசுத்தவான்களையல்ல, திரளான ஜனங்களை குணமாக்குவதில் நிறைவேறிவிட்டது என்பதைக் காண்பிக்கிறது.

24. அவரால் விடுவிக்கப்பட்டவர்களின் சரீர பெலவீனங்களால் அவர் வேதனையை அனுபவித்ததின் நோக்கம், அவர் பாவமில்லாதவராகவும் வியாதியில்லாதவராகவும் வேதனையில்லாதவராகவும் இருந்ததால் மற்றவர்களிடமிருந்து அவைகளை எடுத்து சுமந்து அவ்விதம் நம்முடைய பெலவீனங்களின் உணர்வினால் தொடப்படுவதற்கே ஆகும். எபி 4:15. மேலும் அவரது கிருபையை ஏற்றுக் கொள்ளுகிற எல்லோரையும் தேவனுடைய குறித்தவேலையில் அவர் நியாயமாக்கி உயிர்த்தெழுதலினால் மரணத்திலிருந்து விடுதலைக் கொடுப்பதற்காக நம்முடைய பாவங்களின் தண்டனையை சுமந்தார். அவ்விதம் இந்த பாடப்பகுதியில் சுவிசேஷயுக

பிரதிஷ்டைக்காரர்கள் தங்களுடைய சரீர வியாதிகளை இயேசு குணமாக்க வேண்டும் என்று அவரை கேட்கவும் எதிர்ப்பார்க்கவும் எதுவும் தெரிவிக்கவில்லை.

**விசுவாசிகளை தொடருகிற அடையாளங்கள்**

25. மாற் 16:9-20 வேதபகுதி சினைய்டிக் (Sinaitic) வற்றிக்கண் (Vatican) உட்பட பூர்வீக முக்கியமான எழுத்துச் சுவடிகளில் காணப்படவில்லை. ஆதலால் அவைகள் கூட்டப்பட்டவைகள் என்றும் போலியானவைகள் என்றும் அநேகர் கருதுகிறார்கள். இதற்கான ஆதாரங்களை கீழே கொடுத்திருக்கிறோம்.

American Standard Version

9 Now when he was risen early on the first day of the week, he appeared first to Mary Mag-da-le-ne, from **check.........**

கத்தோலிக்க TNBCLC மொழிபெயர்ப்பு

[9 வாரத்தின் முதல் நாள் காலையில் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவர் முதலில் மகதலா மரியாவுக்குத்

16: 9-20] அடைப்புக்குறிக்குள் உள்ள இவ்வசனங்கள் சில முக்கியமில்லாத கையெழுத்துப் பதிவுகளில் மட்டுமே காணப்படுகின்றன.

26. மாற் 6:17,18 விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: (i) என் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவார்கள்; (ii) நவமான பாஷைகளைப் பேசுவார்கள். (iii) சர்ப்பங்களை எடுப்பார்கள்; பரி.பவுல் இதனைச் செய்தார் (அப் 28:3-5) (iv) சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது; (v) வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அவர்கள் சொஸ்தமாவார்கள். இந்த வேதபகுதி கூட்டப்பட்டதொன்றாய் இருந்தாலும் நிதானமாகப் பகுத்து (2தீமோ 2:15) கீழ்க்கண்டவாறு இணக்கமாய் இசைவாக்குகிறோம். இந்த வேதபகுதி (அந்த காலக்கட்டத்திற்குப் பின்பு) மேலும் ஒருபோதும் பொருந்தாததாயிருக்கிறது.
27. யூதர்களுக்கும் புறஜாதியார்களுக்கும் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட இரு நிகழ்ச்சிகளைக் குறித்து அப் 2:1-4; 10:44-47; 11:15 இல் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரு சந்த்தர்ப்பங்களைத் தவிர மற்ற இடங்களில் பரிசுத்தாவி ஊற்றப்படவில்லை. மற்ற இடங்களில் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்ததின் மூலமே பரிசுத்தாவி கொடுக்கப்பட்டது. (அப் 8:14-18; 19:1-6) அப்போஸ்தலரல்லாத மற்றெவரும் பரிசுத்த வரங்களைக் கொடுத்ததற்கான ஆதாரங்களை வேதாகமத்தில் தேடுவது வீணான முயற்சியாகும்.
28. பரிசுத்த ஆவியின் வரத்தை மற்றவர்களுக்குக் கொடுப்பது அப்போஸ்தலர்களுக்கு பிரத்தியோகமாகக் கொடுக்கப்பட்ட ‘அப்போஸ்தல வல்லமையாகும்’. அது அவ்விதம் பிரத்தியேகமான ‘அப்போஸ்தல வல்லமையாக’ இல்லாதிருப்பின், பரி.பவுல் தன்னை அப்போஸ்தலனாக ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு தம்முடைய அப்போஸ்தல ஊழியத்தை மெய்ப்பிக்க தம்முடைய எதிர்வாதத்தில் (கலா 3:5; ரோம 1:10) பரிசுத்த ஆவியின் வரம் கொடுப்பதை அப்போஸ்தலத்துக்கு நிரூபணமாக எடுத்துக்காட்டியிருக்க

முடியாது (கலா 1:11-3:5). ஆதலால், ஆவியின் வரங்களை தேவன் மற்ற தேவஜனத்திற்க்கு கொடுப்பதற்கு மனித கருவிகளாக உபயோகிக்கப்பட்டவர்கள் அப்போஸ்தலர் ஆவார்கள்(ரோம 1:10). அப்போஸ்தலனால் ஆவியின் வரங்களைப் பெற்றிருந்த கடைசி சீஷன் (அப்போஸ்தலரின் காலத்திற்குப் பின்பு) எப்போது மரித்தானோ அப்பொழுதே இந்த வரங்கள் ஒழிந்து விட்டன.

**வரங்கள் ஒழிந்து போயின கிருபைகள் நிலைத்திருக்கின்றன**

29. பரி.பவுல், தேவனுடைய வெளிப்பாடுகள் முழுமையடையாதிருந்த காலத்துக்குரிய ஆவியின் வரங்கள் (Gifts of Spirit) ஒழிந்து போகிறதை (நிலையற்றுப் போவதை), விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்ற ஆவியின் கிருபைகள் (Graces of Spirit) சுவிசேஷ யுகம் முழுவதும் நிரந்திரமாக நிலைத்திருக்கிறதோடு ஒப்பிடுகிறார். ஆவியின் கிரியைகளாகிய, விசுவாசம் நம்பிக்கை அன்பு சுவிசேஷ யுகம் முழுவதும், குறிப்பாக வெளிப்பாடு முழுவதையும் முழுமையாக புரிந்து கொள்ளுகிற சுவிசேஷயுக முடிவுகாலக்கட்டம் வரை நிலைத்திருக்கும்.
30. 1கொரி 13:8-13 இல் பரி.பவுல் கூறுகிறதாவது: “அன்பு ஒருகாலும் ஒழியாது” (ஒருபோதும் ஒழிந்து போகாது). (ஆனால்-but) தீர்க்கதரிசனங்களானாலும் (ஆவியின் வரங்களில் ஒன்று - வச.2 1கொரி 12:10) ஒழிந்துப்போம் (ஆவியின் வாரங்களாகக் கொடுக்கப்படுதல் நின்று போகும்). அந்நிய பாஷைகளானாலும், அறிவானாலும் (ஆவியின் வரங்களில் ஒன்று வச.2; 1கொரி 12:8) ஒழிந்துபோம். (ஏனெனில்-for) நம்முடைய அறிவு குறைவுள்ளது. (For we know in part - நாம் முழுமையற்ற குறைந்த பகுதியையே அறிந்திருக்கிறோம்). அதாவது தேவனுடைய வெளிப்பாடு ஒரு பகுதியே கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் தீர்க்கத்தரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது. (we prophesy in part - நாம் முழுமையல்லாது குறைந்த பகுதியையே தீர்க்கதரிசனமாய்க் கூறுகிறோம்).
31. பரி.பவுல் எழுதும் காலக்கட்டத்தில் புதிய ஏற்பாடு தோற்றுவிக்கப்படாது வேதாகமம் முழுமைபெறாதிருந்ததைக் கவனத்துக்கு கொண்டு வருவோமாக. அந்த காலக்கட்டம் வேதபுத்தகம் முழுமையடையாதிருந்த, பூரணமாய் கொடுக்கப்படாதிருந்த யூத யுக அறுவடையின் காலமாகும். அவ்வரங்கள் அந்த காலக்கட்டத்தின் முழுமையடையாத வெளிப்பாட்டிற்கு குறைநிறைவு செய்வதற்காக இருந்தன. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். (வச. 10) அதாவது பூரணமான வெளிப்பாடு - முழுமையான வேதாகமம் வரும்போது அப்போதிருந்த அதாவது குறைவை நிறைவு செய்யக் கொடுக்கப்பட்டிருந்த ஆவியின் வரங்கள் இல்லாமல் போய்விடும். அப்பொழுது வேதாகமம் (தேவனுடைய வார்த்தை) முழுமைப் பெறாதிருந்ததினிமித்தம் ஆவியின் வரங்கள் இருப்பதாகவும், தேவனுடைய வெளிப்பாடு முழுமையாய் பூரணமடைந்தவுடன் அந்த ஆவியின் வரங்கள் ஒழிந்துவிடும் என்று பரி.பவுல் இங்கு கூறுகிறார். பரி.பவுல் மேலும் தொடர்ந்து அதனை விளக்குவதை கவனியுங்கள். நான் குழந்தையாய் இருந்தபோது குழந்தையைப் போல பேசினேன், குழந்தையைப் போல சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன், நான் புருஷனானபோதோ,

குழந்தைகேற்றவைகளை ஒழித்து விட்டேன் - (வச.11) இங்கே அவர், சிறு குழந்தையாயிருக்குங் காலம், பூரண மனிதனான போது பொருந்தாது என்று புறக்கணிக்கப்படுதலை ஒரு உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார். அதாவது ஆவியில் குழந்தை பருவத்திற்குரிய ஆவியின் வரங்கள், சபை வளர்ச்சியடைந்த (புருஷனான) நிலைக்கு (சுவிசேஷயுகத்தில்) உரியதல்ல என்று கூறுகிறார்.

32. மேலும் அவர் கூறுகிறதாவது (வச.12) (ஏனெனில் - for) இப்பொழுது அப்போஸ்தலர்களின் நாட்களில்) "கண்ணாடியில் நிழலாட்டமாய் பார்க்கிறோம்". வெளிப்பாடுகள் வெளிப்படுதல் பூரணமடையவில்லை. அதன் பகுதிகள் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடாதவாறு மங்கலாகவும் இருந்ததை அர்த்தப்படுத்துகிறார். ஆனால் அப்பொழுது முகமுகமாய் பார்ப்போம். அதாவது சுவிசேஷயுக முடிவில் (அப்பொழுது) அதாவது சுவிசேஷயுக அறுப்பு காலத்தில் தெள்ளத்தெளிவாகக் (முகமுகமாய்) காண்போம் (ஏசா 52:8). இப்பொழுது (சுவிசேஷயுகத்தில்) நான் (சபை) குறைந்த அறிவுள்ளவன். (but) ஆனால், அப்பொழுது (சுவிசேஷயுக முடிவில், அறுப்புகாலத்தில்) அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன்(வச 13). இப்பொழுது (சுவிசேஷயுகம் முழுவதும் (2கொரி 6:2) விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது". இவ்வாறாக இந்த வேத பகுதியில் சிலகாலம்மட்டும் இருந்து ஒழிந்துபோகிற ஆவியின் வரங்களோடு சுவிசேஷயுக முடிவுமட்டும் நிலைத்திருக்கிற விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் ஆவியின் கிருபைகளைப் பற்றி பேசப்பட்டிருக்கிறது (Gift of Spirit Vs Graces of Spirit).

33. 'குணமாக்கும் வல்லமை' ஆவியின் வரங்களில் ஒன்றாகும் (1கொரி 12:7-11). ஆதலால் அது பரிசுத்தாவி ஊற்றப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களைத்தவிர, ஒரு அப்போஸ்தலன் மூலமாகவே கொடுக்கப்பட்டது (ரோம 1:10). அப்போஸ்தலர்கள் மூலமாகவே தவிர மற்றபடி வரங்கள் ஒருபோதும் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் ஆவியின் வரங்களைக் கொடுப்பது 'அப்போஸ்தல வல்லமை' அதாவது 'அப்போஸ்தல அதிகாரம்' (Apostalic Power or Apostalic Authority) இதற்குள் உட்பட்டது. ஆகவே கடைசி அப்போஸ்தலன் மரித்தப் போனபின்பு அதற்கு பிறகு அது யாருக்கும் கொடுக்கப்படவில்லை. அப்போஸ்தலனிடமிருந்து அந்த வரத்தைப் பெற்ற ஆவியின் வரத்தையுடைய சீஷன் மரித்துப் போனபின்பு அது ஒழிந்து போயிற்று.

34. மாற்.16:17,18 யை சுவிசேஷயுகத்தின் ஆரம்பக்காலக்கட்டத்திற்கு மட்டுமே பொருந்த செய்ய வேண்டும். மேலும் இந்த வேதபகுதி மாற். 16:9-20 மிகவும் முக்கியமான பழமையான எழுத்துச் சுவடிகளில் காணப்படவில்லை என்பதை மறுபடியும் ஞாபகத்தில் கொண்டுவருவோமாக.

**பாவ வியாதியைக் குணமாக்குதல்**

35. (1)யாக்கோபு 5:14,15 இல் கொடுக்கப்பட்டிருக்கிறதை ஆதாரமாகக் காட்டி அநேகர் விசுவாசத்தினால் சரீரவியாதி குணம்பெற தேவனுடைய ஜனம் நாடவேண்டும் என்று வாதம் செய்கிறார்கள். இதில் கொடுக்கப்பட்டிருக்கிற கருத்துக் தொடர்பு, சரீர வியாதி குணமாக்குதலைக் குறித்து பேசாது, பாவ வியாதிகளைக் குணமாக்குதலைக்

குறித்தே பேசுகிறது என்பதை நிரூபிக்கிறது. வச.13-ல் இருந்து 20ஆம் வசனம் வரை அதன் விளக்கத்தைக் கீழே தருகிறோம் (வச.13). 'உங்களில் ஒருவன் துன்பப்பட்டால்' சரீர வியதியாலோ, இழப்பாலோ, பிரச்சனைகளாலோ, ஏமாற்றங்களாலோ, துன்பப்பட்டால் - 'ஜெபம் பண்ணக்கடவன்' - போதுமான கிருபைக்காக ஜெபம் பண்ணக்கடவன். 'ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் - (வச.14) 'உங்களில் ஒருவன் வியாதிபட்டால் - ஆவியில் வியாதிப்பட்டு, பாவத்தினால் வியாதிப்பட்டால் - இங்கு வியாதி என்பதற்கு உபயோகிக்கப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை அஸ்தெனியொ (**Astheneo**) என்பதாகும்.

(2)இந்த வார்த்தை ரோம 4:19; 8:3; 14:1,2; 2கொரி 11:21; 12:9,10 (**etc**) போன்ற அநேக வேதபகுதிகளில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்த இடங்களில் எல்லாம் வருகிற அஸ்தெனியொ என்ற வார்த்தைக்கு 'பெலவீனம்' என்று பொருளாக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படியே இங்கேயும் 'வியாதி' என்று பொருள் கொள்ளாது, பெலவீனம் என்று பொருள் கொள்ளல் வேண்டும். அதன்படி 'உங்களில் ஒருவன் பெலவீனமாயிருந்தால்' என்று அர்த்தப்படுத்த வேண்டும். இது ஆவிக்குரியக் கருத்தில் பெலவீனத்தைக் குறிக்கிறது. ஏனெனில் சரீர வியாதியைக் குறித்த காரியம் வசனம் 13இல் துன்பப்பட்டால் (**afflicted**) என்ற வார்த்தையில் அடங்கியிருக்கிறது. ஆதலால் வச.14 வேறுவிதமான துன்பத்தைக் குறித்து அதாவது பாவ பெலவீனத்தைக் (வியாதியைக்) குறித்துப் பேசுகிறது.

36. 'அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக', இங்கு சபையின் மூப்பர்கள் என்பது சத்திய போதகர்களைக் குறிக்கிறது. சபையின் சத்திய போதகர்களைக் குறிக்கிறது. சபையின் சத்திய போதகர்களை அழைக்கப் போதிக்கப்பட்டிருக்கிறது. 'அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்'. அவனுடைய பாவ வியாதி நீங்கும்படி 'எண்ணெய்' அதாவது ஆவிக்குரிய எண்ணெய் அதாவது உருவகப்படுத்தப்பட்ட மருந்தாகிய (சக. 4:11-14) தேவ வார்த்தையைக் கொண்டு அவனுடைய பாவ வியாதி நீங்கும்படி அவனுக்காக ஜெபிக்க வேண்டும்.

37. சக 4:11-16 இல் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு ஒலிவ மரங்களிலிருந்து வருகிற எண்ணெய், பழைய புதிய ஏற்பாடுகளிலிருந்து வருகிற சத்தியத்தை அடையாளப்படுத்துகிற (வெளி 11:3,4). 'கர்த்தரின் நாமத்தினாலே என்று சொல்லும்போது, தேவனால் அதிகாரம் பெற்றிருக்கிற தேவசெய்தியைக் கொடுக்கிறவர்கள் அதைச் செய்ய வேண்டும். 'அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்'. பாவவியாதியில் அகப்பட்டுக் கொண்டவன் தனக்காக ஜெபிக்கும் மூப்பர்களோடு விசுவாசமுள்ள ஜெபத்தை ஏறெடுக்கும் போது, அது அந்த ஆவிக்குரிய வியாதியிலிருந்தும் மரணத்திலிருந்தும் அவன இரட்சிக்கும். 'கர்த்தர் அவனை எழுப்புவார்'. அதாவது கர்த்தர் அவனை அவனது பாவ வியாதியிலிருந்து எழுப்புவார். 'அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்'.

38. இங்கு, பாவம் செய்தவனானால், 'ஆல்' (if) என்று ஒரு நிபந்தனைக்குள் இந்த மொழியாக்கம் அமைந்திருக்கிறது. இந்த நிபந்தனைக்கு உபயோகிக்கப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை 'கான்' (kan) ஆகும். இந்த் வார்த்தை யோவா 8:14; 10:38; 11:25 இல் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அங்கு 'ஆல்' (if) என்ற நிபந்தனைக்குரிய கருத்தில் மொழியாக்கம் செய்யாமல் 'என்றாலுங் கூட' (Though) என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். இதன்படி அதன் சரியான மொழியாக்கம் நிபந்தனையாயிராது, விட்டுக் கொடுக்கும் சலுகை இயல்புடையதாய் அமைய வேண்டும். அதாவது, 'அவன் பாவஞ்செய்திருந்தாலுங்கூட என்று அமைய வேண்டும். அவன் பாவம் செய்துவிட்டத்தின் காரணமாக பாவ வியாதியாயிருக்கிறான். அவ்விதம் பாவ வியாதியாயிருந்தாலுங் கூட அவன் மூப்பர்களைக் கூப்பிட்டு, அவர்களால் சத்திய போதனை செய்யப்பட்டு, அவர்களோடு ஜெபம் செய்யும்போது அவன் மன்னிக்கப்படுகிறான் என்பதானதொரு சலுகையை இது குறிக்கிறது.

39. இந்த பாவ வியாதியைக் குறித்து பவுல் மேலும் கூறுகிறதாவது, 'நீங்கள் சொஸ்தம் அடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்கொருவர் ஜெபம் பண்ணுங்கள்'. 'உங்களுடைய பாவவியாதியிலிருந்து (எபி 12:13) குனமடையும்படி பாவத்தை அறிக்கையிடும்படி கூறப்பட்டிருக்கிறதை கவனியுங்கள். இந்த வேதபகுதி, பாவ வியாதியைக் குறித்தே பேசுகிறது என்பதை நன்கு தெளிவுபடுத்துகிறது. 'நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல்' (பாவ வியாதியைக் குணமாக்க) மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

40. மேலும் அப்போஸ்தலன் ஜெபம் பயன் உண்டாக்குவதை நிரூபிப்பதற்கு, எலியாவின் ஜெபத்தையும், எவ்விதம் தேவன் அதற்கு பதில் அளித்தார் என்பதையும் தெரிவிக்கிறார். அவ்விதம் அவர் அதற்கு பின் பாவவியாதியைப் பற்றி தொடர்ந்து பேசுகிறார். (வச.19) 'சகோதரரே உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி (பாவ வியாதியைத் தொடர்ந்து நிகழ்கிறதொன்று) மோசம் போகும்போது மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன்' தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய எண்ணெயை பூசுவது மூலம் - 'ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சித்து திரளான பாவங்களை - கிறிஸ்துவின் நீதியின் சால்வையைக் கொண்டு - மூடுவான் என்று அறியக்கடவன்'. இதிலிருந்து யாக். 5:13-20 இல் கொடுக்கப்பட்டிருக்கிற தேவ செய்தி எந்தவித சந்தேகமுமில்லாமல் சரீர வியாதியைப்பற்றி பேசவில்லை என்றும், அது ஆவிக்குரிய வியாதியைக் குறித்தும், அதை குணமாக்குதலைக் குறித்துமே பேசுகிறது என்று நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

## நியாயபிரமாணத்தின் கீழ் ஆசீர்வாதங்கள்

41. எசேக்கியா ராஜாவின் ஜெபத்துக்கும் கண்ணீருக்கும் உத்திரவாக அவன் குணமான காரியம் (2ராஜா 20:1-7), கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற நாம், அந்த மாதிரியை பின்பற்றி அப்பேர்ப்பட்ட குணமாக்குதலைப் பெறவேண்டும் என்று அது போதிக்கிறதாகச் சிலர் சிந்திக்கிறார்கள். முதலாவது, எசேக்கியா குமாரர்களின்

வீட்டைச் (**House of Sons**) சேர்ந்தவன் அல்ல, அவன் நியாயப்பிரமாணத்தின்படி பணிவிடைக்காரரின் (House of Servants) வீட்டைச் சேர்ந்தவன் (எபி 3:5,6).

42. நியாயப்பிரமாண உடன்படிக்கை, ஒன்றையும் பூரணமாககவில்லை; மேலும் இஸ்ரவேலில் ஒருவனும் அதன் பரிபாலனத்தின் கீழ் நித்திய ஜீவனைப் பெறவுமில்லை, பெறமுடியவுமில்லை. கிறிஸ்து இஸ்ரவேலின் ராஜாவாக நியாயபிரமாணக் கோரிக்கைகளை நிறைவேற்றி அதன் பரிசாக, நித்திய ஜீவனை சுதந்தரிக்கும் வரை, நியாயபிரமாணம் சரீரப்பிரகாரமான சுகத்துக்கும், இஸ்ரவேலின் வளமான செழிப்புக்கும் வழிசெய்கிற ஒரு விசேஷமான ஏற்பாடாயிருந்தது. (யாத் 23:25,26 லேவி 26:3-16; உபா 7:11-15; 28:1-12,15,21,,27,28,37-42,45-53,59-61). அவர்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் கீழ்ப்படிந்து இருந்தால் எல்லா தேசத்தாருக்கும் மேலாக உலகக்காரியங்களில் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாவிடில், விசேஷமான தண்டனையைப் பெறுவார்கள். எசேக்கியாவின் ஜெபத்துக்கும், கண்ணீருக்கும் உத்திரவாக அவன் குணம் பெற்றது, 'நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கே' கொடுக்கப்படுகிற ஆசீர்வாதங்களில் ஒன்றான சரீரம் குணமாகுதலாகும். ஆகவே இதிலிருந்து நாம் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களோடு இது இணக்கமாய் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுகிறோம்.

43. ஆசா ராஜா தனது காலில் வியாதி உள்ளவனாக இருந்தான். அவன் கர்த்தரைத் தேடாமல் பரிகாரிகளைத் தேடினான் (2நாளா 16:12). அவன் கர்த்தரைத் தேடிச் செல்லவில்லை. ஆதலால் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிவதால் கிடைக்கும் பரிசான, வியாதி குணமடைதலை அவன் பெறவில்லை. மருத்துவர்களின் உதவியை நாடினத்தில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் ஆசா செய்த தவறு என்னவெனில், அவன் மருத்துவர்களை மட்டுமே நாடினான். தேவனையும், தேவனுடைய தீர்க்கதரிசிகளையும் புறக்கணித்து போட்டதற்காக, மனஸ்தாப இருதயத்தோடு யாவே (**YAHWEH**) தேவனைத் தேடிப் போகவில்லை. (2நாளா 16:7-10).

44. சங்கீதம் 103:2-4 'என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து உன் நோய்களைக் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு உன்னைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டி'. இந்த கருத்தை சுவிசேஷயுகத்து சபைக்குரிய சரீரநிலைக்குப் பொருந்தும்படி எடுக்கும் எந்தபிரயாசமும், பெலவீனமாயும் நொண்டியாயுமிருக்கிறது. மணவாட்டி சபையின் முதல் அங்கத்தினரிலிருந்து கடைசி அங்கத்தினர் வரை அவர்களது சரீர வியாதியைக் குணமாக்க கர்த்தர் சித்தமுள்ளவராய் இருக்கவில்லை என்பதை யார் தான் அறியமாட்டார்கள், என்றபோதிலும் பிரதிஷ்டை ஜனம், அவிக்குட்பட்ட வியாதிகள் தேவனின் உன்னதமான விலையேப்பெற்ற கீலயாத்தின் பிசின் தைலத்தினால் குணமாக்க எதிர்பார்க்க இந்த வேதவசனங்கள் உத்திரவாதங் கொடுக்கின்றன. அவ்வளவாய் அவைகள் உன்னதமான விலையேறப்பெற்ற தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்களால்

கட்டப்பட்டிருக்கின்றன. அவ்வளவாய் அவைகள் மனிதனால் கொடுக்கமுடியாததும், எடுக்க முடியாததுமான சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும் சரீயீடு செய்யப்படுகின்றன. எப்படியெனில் இருதயத்தின் வியாதி பதட்டம் ஆகியவை பரிசுத்த ஆவியின் அன்பும் சந்தோஷமும், சமாதானமும் எங்கு வாசஞ்செய்து ஆளுகிறதோ அங்கு மேலும் ஒருபோதும் எல்லைமீறி புகமுடியாதபடி சரியீடு செய்யப்படுகின்றன.

**இன்றைய நாளில் விசுவாசத்தினால் குணமாக்குதல்**

45. ஒரு கவனமான வேதமாணாக்கன், மேலே கொடுக்கப்பட்ட செய்தியிலிருந்து, இப்பொழுது கிறிஸ்தவ மண்டலங்களில் பெருமளவில் அநேகரை வாரிக்கொண்டு போகிற 'விசுவாசத்தினால் குணமாக்குதல்' (Faith Healing) என்ற பலத்த அலைக்குப் பின்னால் தேவன் இருக்கவில்லை என்று சட்டென்று கண்டுகொள்ளுகிறான். அவைகள் பெருமளவில் சாத்தானுடையதும் பிசாசுகளுடையுதுமான வேலையாயிருக்கின்றன. அவர்கள் தங்கள் வஞ்சனைகளை, 'சகல வல்லமைகளோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்' (2தெச 2:9,10) செய்கிறார்கள். அவர்கள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள் (வெளி 16:14).

46. விசுவாசத்தினால் குணமளித்தல் என்ற காரியம், அடிப்படையான கிறிஸ்தவக் கொள்கைகளை மறுதலித்தாலுங்கூட கிறிஸ்தவ மதமென்கிற போர்வையின் கீழ் பலவிதமான சுகமளிக்கும் ஊழியங்களையும், சுகமளிக்கும் ஸ்தலங்களையும் நிறுவியிருக்கிறது. இது அநேக நூற்றாண்டுகளாக புறஜாதி மதங்களில் நிலைத்திருந்தது போல இப்பொழுது கிறிஸ்தவ மண்டலங்களில் நிலை கொண்டிருக்கிறது. அநேக கிறிஸ்தவமார்க்கம் சபைகள் இதனால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறது. கிறிஸ்டியன் சைன்டிஸ்ட் (Christian Scientist- கிறிஸ்தவ ஞானி) நியு தாட் க்ரூப் (New Thought Group-புதுசிந்தை வகுப்பார் ஹோலினஸ் (Holiness-பரிசுத்தம்) கிறிஸ்டியன் அலையன்ஸ் (Christian Alliance-கிறிஸ்தவ கூட்டமைப்பு) பெந்தகொஸ்தே ஆகிய இந்த கிறிஸ்தவ மார்க்கத்தார்களுக்கு 'விசுவாசத்தால் குணமாக்குதல்' மிகமிக முக்கியமான சித்தார்த்தங்களில் ஒன்றாக இருக்கிறது

47. பெந்தகொஸ்தேயைச் சேர்ந்த ஓரல் ராபர்ட்ஸ்(Oral Roberts), மற்றும் டாக்டர் வியட்(Dr.Wyett), டாக்டர் ஒயல் ஜாக்கர்ஸ்(Dr.Oyal Jaggers), ஆலன்(Allen), ஜான் மஹிலாட் (John Mahilard) தமிழ்நாட்டில் பால் ஆசீர் லாரி, D.G.S. தினகரன் போன்ற அநேகர் தங்களுடைய வெளியீட்டாலும், பெரியக் கூட்டங்களை நடத்தியும், ரேடியோ, டெலிவிஷன் மூலமாகவும், ஏராளமான பொதுமக்களின் கவனத்தைக் கவர்ந்து இழுத்திருக்கிறார்கள். பொதுமக்களின் அபிப்ராயத்தை இவ்வித கருத்து நிலையில் உருவமைக்கவும் அநேகக் காரியங்கள் செய்திருக்கிறார்கள். இவர்கள், குணமாக்கும் அற்புதங்களை செய்து அநேகரை பிரமிக்கச் செய்துமிருக்கிறார்கள். ஒருசிலர் தங்களுடைய குணமளிக்கும் முயற்சியின் விளைவாக தங்கள் பணப்பெட்டியை அதிகமாக நிரப்பி செழித்திருக்கிறார்கள். இவ்விதம் விசுவாசத்தினால் குணமாக்குதல் என்பது இன்றையக் காலக்கட்டத்தில் பெருமளவு வியாபாரமாக இருப்பது தெரிந்த உண்மையாயிருக்கிறது.

48. விசுவாசத்தினால் குணமளிப்பவர்களில் சிலர் போலியானவர்களாயும், எத்தர்களாயும் இருந்தாலுங்கூட, அவர்களில் அநேகர் கலங்கமற்றவர்களாயிருக்கிறார்கள். அவ்விதம் அநேகர் கபடமற்றவர்களாயிருந்தாலுங்கூட, சாத்தானால் வஞ்சித்தலுக்கு ஒரு வழி மூலமாயிருக்கிறார்கள். 'சாத்தானும் ஒளியின் வேஷத்தை தரித்துக் கொள்வான் 2கொரி 11; 14 என்பதையும், 2தீமோ 3:1-13 கடைசி நாட்களில் சாத்தான் பிசாசுகளை விரட்டுதலையும், வியாதிகளைக் குணமாக்குதலையும் நாம் காணும்போது அவனது ராஜ்யம் தனக்குத்தானே பிரிந்து நிலைநிற்க்கமாட்டாது போகும் நிலைக்கு வந்துவிட்டதை நாம் மறந்து விடக்கூடாது. அவனுடைய காலம் நெருங்கிவிட்டது என்று அறிந்து கொள்ளலாம். ஏனெனில் கடைசி நாட்களில் 'கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்' (மத் 24:24). அவர்கள் கிறிஸ்துவால் அறியப்பட்டவர்களல்ல (மத் 7:22,23).

## ஏன் இயேசு அற்புதம் செய்தார்?

49. அவருக்குப் பின்செல்பவர்களால் இன்றையக் காலக் கட்டத்தில் இந்த அற்புதங்களான காரியங்களை எல்லாம் செய்யவேண்டாம் என்றால், இயேசு கிறிஸ்து ஏன் அற்புதங்களைச் செய்தார்? ஏன் வியாதிகளை அவர் குணமாக்கினார்? ஏன் மரித்தவர்களை எழுப்பினார்? என்று ஒருவேளை அநேகர் கேள்விகளைக் கேட்கலாம். யோவா 2:11இல் இயேசு முதலாவது அற்புதத்தை கலிலேயாவிலுள்ள கானாவூரில் செய்து தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார் என்று வாசிக்கிறோம். அவருடைய அற்புதங்கள் வரவிருக்கிற தேவனுடைய ராஜ்யத்தின் உபதேசங்களின் ஒரு பகுதியாகும். அந்த அவரது ராஜ்யத்தில் தேவனின் மகிமை பூமியெல்லாம் நிறைந்திருக்கும் (எண் 14:21). அப்பொழுது பரலோகத்தில் அவருடைய சித்தம் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படும் (மத் 6:10) அப்பொழுது பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய (இயேசுவின்) சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அப்பொழுது அவர்கள் அதிலிருந்து எழுந்திருக்கிறவர்களாக இருப்பார்கள். (யோவா 5:28,29; தானி 12:2; 1கொரி 15:22).

50. அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்படும், செவிடர்களின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான். ஊமையன் நாவும் கெம்பீரிக்கும். அதுவே (ஏசா 35:5,6). உண்மையாக நீதிவாசமாயிருக்கும் புதிய பூமியாகும். (2பேது 3:13; வெளி 21:1-5) கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் (Times of Refreshing - தெம்பூட்டுங் காலங்கள்) வரும் என்றும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்புவார் என்றும் உலகத் தோற்றமுதல் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் உரைத்தவைகள் நிறைவேறித்தீருங் காலம் (**Times of Restitution** - இழந்துபோனதை எல்லாம் திரும்பப் பெறும் காலம்) என்றும் உரைக்கப்பட்டிருக்கிறது (அப் 3:19-21). ஆதலால் வியாதி நீங்கிப் போகிற இழந்துபோன பரதீஸ் (**The Paradise**)

மறுபடியும் தூக்கி நிறுத்தப்படுதல், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை தொடர்ந்து வருகிற அவருடைய 1000 வருட ஆட்சி முடியும்வரை நிறைவேறாது.

51. இயேசுவும் அவரது மணவாட்டி சபையும் ஆபிரகாமின் வித்தாக பூமியின் சகல வம்சங்களையும், ஆசீர்வதிக்கிற தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிப்பதில் (ஆதி 12:3; 22:18; கலா 3:8,16,29) சரீரப்பிரகாரமான அசீர்வாதங்களின் சிலவற்றை அவர் செய்த அற்புதங்களினாலே விளக்கிக் காண்பித்தார். மணவாட்டி சபை அங்கத்தினர்கள் ஆரம்பக்காலத்தில் ஆவியின் வரங்களால் அப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய முடிந்தது. ஆனால் தேவனால் பற்பல அம்சங்களில் கொடுக்கப்பட்ட அந்த வல்லமை, மேலே காட்டப்பட்ட பிரகாரம் ஒழிந்து போக வேண்டும் (1கொரி 13:8), அதாவது இப்பொழுது அவைகள் இல்லாது மறைந்து போய்விட்டன. ஆகவேதான் இன்றைய கிறிஸ்தவர்கள் மரித்தவர்களை எழுப்புவதை பார்ப்பதில்லை.

52. இந்து மத வழிபாட்டு மடாதிபதிகள், ஆவியுடன் பேசுகிறவர்கள் (Spirit Mediums), சூனியக்காரர்கள், மந்திர மாயாஜாலக்காரர்கள், கிறிஸ்தவ சைன்டிஸ்ட்கள் (Christian Scientists) விசுவாசத்தினால் குணமளிக்கிற கிறிஸ்தவ கூட்டத்தார், பெந்தகொஸ்தேகாரர்கள் பொதுவாக பிசாசுகளை விரட்டுவதாகவும், அநேக அற்புதங்களை செய்வதாகவும் (மத் 7:22,23) கோரினாலுங் கூட, அவர்களால் இறந்து போனவர்களை எழுப்ப முடியவில்லை. அவர்களால் சர்ப்பங்களை எடுக்க முடியுமா? சாவுக்கேதுவானதைக் குடித்து சேதப்படாமல் இருக்க முடியுமா? அவர்களால் முடியாது (மாற் 16:18).

53. இந்தவிதமாக வியாதிகளைக் குணமாக்குதலும் பிசாசுகளை விரட்டுதலுமான அற்புதக் கிரியைகள், வஞ்சக செய்கை மூலமாவது அல்லது சில இயற்கை வழிமுறையிலாவது அல்லது சிலவேளைகளில் இயற்க்கைக்கு அப்பாற்ப்பட்ட உதவிகளினாலும் செய்கிறார்கள். இந்த இயற்க்கைக்கு அப்பாற்ப்பட்ட சக்தியின் மூல ஆரம்பத்தைக் குறித்து அவர்கள் அறியாதிருக்கிறார்கள். அவர்கள் அக்கிரமச் செய்கைக்காரராய் இருக்கிறார்கள். (மத் 7:23) பாவம், மரணம் அதனுடன் இயக்குகிற வியாதி வேதனை ஆகியவைகளின் சாபக் கட்டுகளிலிருந்து விழுந்து போன மனுக்குலத்தின் விடுதலைக்குரிய தேவனுடைய காலம், இந்தக் காலக்கட்டம் அல்ல என்று நாம் நம் மனதில் பதிவு செய்ய வேண்டும்.

54. தேவன் நீதியாய் உலகத்தை நியாயம் தீர்க்க (அப் 17:31; ஏசா 26:9; 2:4) ஒரு நாளை அதாவது 1000 வருடங்களைக் கொண்ட நாளை (2பேது 3:8) நியமித்திருக்கிறார். அதன்பின்பு பூமியின் வாசிகள் நான் வியாதிப்பட்டிருக்கிறேன் என்று சொல்லுவதில்லை (ஏசா 33:24). ஏனெனில் அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி (ஆதாமின்) மரணமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை (வெளி 21:4). இனி ஒரு சாபமுமிராது (வெளி 22:3).

உம்முடைய ராஜ்யம் வருவதாக என்று ஜெபிப்போமாக.

FAITH HEALING - TRACT